தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066


dinakani2023@gmail.com
RNI-TNTAM/2023/88253
நமது
# தினகனி
NAMADHU DHINA KANI
www.dhinakani.com
காலை நாளிதழ்

நகராட்சியில் அனுமதி பெற்ற வாகனம்
ராஜா 24 HOUR SERVICE
செப்டிக் டேங்க்
கிளீனிங் சர்வீஸ்
குறைந்த செலவில்
சுத்தம் செய்து தருகிறோம்



... தொடர்புக்கு ...
63748 77947, 81480 84081


| Vol: 02 | Issue: 258 | 4 Pages | 16.4.2025 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 258 | 4 பக்கங்கள் | 16.4.2025 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்**
**அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு**

**விளக்கம்:**
தவம்செய்கின்றவரேதமக்குரியகடமையைச்செய்கின்றவர் ஆவர், அவர் அல்லாத மற்றவர் ஆசைவலையில் அகப்பட்டு வீண் முயற்சி செய்கின்றவரே.

## கழிவறை டிஷ்யூ பேப்பரில் ராஜினாமா கடிதம்.. நிறுவனத்திற்கு ஷாக் கொடுத்த ஊழியர்




சிங்கப்பூர், ஏப்.16

கழிவறை டிஸ்யூ பேப்பரில் தனது ராஜினாமா கடிதத்தைக் கொடுத்து நிறுவனத்தை ஊழியர் ஒருவர் அதிர்ச்சியில் ஆழ்த்தினார்.

இது தொடர்பான அந்த டிஸ்யூ பேப்பரில், "இந்த நிறுவனம் என்னை எப்படி நடத்தியது என்பதை சுட்டிக்காட்ட இப்படியொரு காகிதத்தில் ராஜினாமாவை எழுதுகிறேன் என்று கழிவறை டிஷ்யூ பேப்பரில் அந்த ஊழியர் எழுதி கொடுத்துள்ளார்.

முன்னதாக இதனை LinkedInல் பகிர்ந்த பெண் தொழிலபதிபர் ஆஞ்சிலா யோஹ், "அந்தக் குறிப்பு வெறும் வலியை ஏற்படுத்தவில்லை, பணியிட கலாச்சாரம் எவ்வளவு முக்கியமானது என்பதை ஒரு நீடித்த நினைவூட்டலாக விட்டுச் சென்றது.

நிறுவனங்கள் ஊழியர்களை மரியாதையாக நடத்த வேண்டும். ஊழியரை சின்ன விஷயங்களுக்கு பாராட்டுவதால்கூட, வேலையில் பல மாற்றங்கள் நடக்கும். அவர்கள் நிறுவனத்தை விட்டு வெளியேற முடிவு செய்தாலும், மனக்கசப்புடன் அல்ல, நன்றியுணர்வுடன் வெளியேறுவார்கள்.

பாராட்டு என்பது தக்கவைப்புக்கான ஒரு கருவி மட்டுமல்ல. ஒரு நபர் எவ்வளவு மதிக்கப்படுகிறார் என்பதற்கான பிரதிபலிப்பாகும், அவர்கள் செய்யும் செயல்களுக்காக மட்டுமல்ல, அவர்கள் யார் என்பதற்காகவும். மக்கள் குறைத்து மதிப்பிடப்பட்டதாக உணர்ந்தால், சிந்திக்க வேண்டிய நேரம் இது. பாராட்டுதலில் ஏற்படும் சிறிய மாற்றங்கள் பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இன்றே தொடங்குங்கள்" என்று அறிவுரை வழங்கி உள்ளார்.

## பாகிஸ்தானில் சக்தி வாய்ந்த வெடிகுண்டு தாக்குதல்: 3 போலீசார் பலி; 16 பேர் காயம்

பலூசிஸ்தான், ஏப்.16

பாகிஸ்தானின் பலூசிஸ்தான் மாகாணத்தில் மஸ்துங் மாவட்டத்தில் தஷ்த் சாலையில் காவல் துறை அதிகாரிகளை ஏற்றியபடி வாகனம் ஒன்று இன்று காலை சென்று கொண்டிருந்தது. அப்போது, அவர்களை இலக்காக கொண்டு சக்தி வாய்ந்த வெடிகுண்டு ஒன்று வெடிக்க செய்யப்பட்டது.

பணியை முடித்து விட்டு 40 பேர் கொண்ட போலீசாரை ஏற்றியபடி வந்த வாகனம் மீது நடந்த இந்த தாக்குதலில் 3 போலீசார் உயிரிழந்தனர். 16 பேர் காயமடைந்தனர். இதில், 2 பேரின் நிலைமை கவலைக்குரிய வகையில் உள்ளது. அவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக அருகேயுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

பலூசிஸ்தான் தேசிய கட்சிமெங்கல் என்ற கட்சியானது, போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறது. இந்த போராட்டம் 19வது நாளாக இன்றும் தொடர்ந்து வருகிறது.

பலூச் தன்னார்வலர்களை கைது செய்யும் நடவடிக்கைகளை பற்றி மற்றவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் இந்த போராட்டம் நடந்து வருகிறது. இதில், 2வது நாள் போராட்டத்தின்போது, அந்த கட்சியின் தலைவர் சர்தார் அக்தர் மெங்கல் மீது தற்கொலை வெடிகுண்டு தாக்குதல் நடந்தது. அதில் இருந்து அதிர்ஷ்டவசத்தில் அவர் உயிர் தப்பினார்.

இந்த போராட்டத்தில் ஈடுபடுபவர்களை கையாள்வதற்காக போலீசார் குவிக்கப்பட்டு உள்ளனர். அவர்கள் பணியை முடித்து கொண்டு திரும்பி வந்தபோது, அவர்களுடைய வாகனம் மீது இந்த தாக்குதல் நடந்துள்ளது. எனினும், இந்த தாக்குதல் ஆனது, நடந்து வரும் போராட்டத்துடன் நேரடி தொடர்புடைய ஒன்றா? என்பது பற்றிய விவரங்கள் எதனையும் அதிகாரிகள் வெளியிடவில்லை.

இந்ததாக்குதலுக்குஎந்தவொருகுழுவும்பொறுப்பேற்கவில்லை.எனினும், சமீப நாட்களாக பயங்கரவாத குழுக்களின் தாக்குதல் அதிகரித்து காணப்படுகிறது.

## சீனாவை மிரட்டும் சூறாவளி: 50 கிலோவுக்கு கீழே உள்ளவர்கள் வெளியே வர வேண்டாம் என எச்சரிக்கை



பிஜீங், ஏப்.16

சீனா தலைநகர் பீஜிங்கில் கடந்த சில நாட்களாக பலத்த சூறாவளி காற்று வீசி வருகிறது.மக்களின் பாதுகாப்புக்காக லாக்டவுன்போன்ற கடுமையான கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. சூறாவளி காற்றால் பீஜிங்கில் விளையாட்டு நிகழ்ச்சிகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. பூங்காக்கள் மூடப்பட்டுள்ளன. ரெயில் சேவை பகுதியாக நிறுத்தப்பட்டு, விமான சேவையும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

மேலும் அத்தியாவசிய தேவையின்றி மக்கள் வெளியே வர வேண்டாம் என்றும் உடை எடை 50க்குள் இருப்பவர்கள் வெளியே வர வேண்டாம் காற்றில்அடித்துசெல்லப்படநேரிடும்என்றுஎச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. மக்கள் பாதுகாப்பாக வீடுகளுக்குள்ளேயே இருக்கும் படி சீன அதிகாரிகள் அறிவுறுத்தி இருக்கிறார்கள்.

சீன தலைநகர் பீஜிங்கில் மணிக்கு 150 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பல இடங்களில் மேற்கூரைகள் தூக்கி வீசப்பட்டதாகவும் சாலைகளில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதாகவும் கடந்த 10 ஆண்டுகளில் சூறாவளிக்காக ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பது

இதுவே முதல் முறை என்று கூறப்படுகிறது. சீரற்ற வானிலை காரணமாக சீனாவிலுள்ள வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த இடங்கள் மற்றும் சுற்றுலாத் தளங்களை மூடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சுமார் 10 ஆண்டுகளுக்கு பின் சீனா எதிர்கொள்ளும் பெரிய புயல் தாக்கம் என்று கூறப்படுகிறது.

# திருநங்கைகள் ரேவதி, பொன்னி ஆகியோருக்கு 2025ம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருது: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, ஏப்.16

சமூகநலன்மற்றும்மகளிர்உரிமைத் துறையின் சார்பில் 2025ம் ஆண்டிற்கான 'சிறந்த திருநங்கை விருதினை' ரேவதி மற்றும் பொன்னி ஆகியோருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். 2021ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் 'சிறந்த திருநங்கை விருது' அரசால் வழங்கப்பட்டு வருகிறது. சிறப்பு குழுவால் தேர்வு செய்யப்படும் இந்த விருதாளருக்கு, திருநங்கைகள் தினமான ஏப்ரல் 15ம் நாளில் (நேற்று) விருது வழங்கி சிறப்பிக்கப்படுகிறது. இந்த விருதினை பெறுபவருக்கு ரூ.1 லட்சம் மதிப்புள்ள காசோலையும், அவர்களது சேவை மற்றும் சாதனைகளை பாராட்டும் விதமாக சான்றிதழும் வழங்கப்படுகிறது.

அந்த வகையில் தனது சொந்த உழைப்பாலும், தனித் திறமையாலும் முன்னேறி, பல திருநங்கை மக்களின் வாழ்வில் மாற்றம் கொண்டு வந்து, அவர்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்து வரும் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த திருநங்கை அ.ரேவதியின் சிறந்த சமூக சேவையை பாராட்டியும், திருநங்கைகள் தங்களது அயராத முயற்சியால் கல்வியிலும்,



கலையிலும் சிறந்து விளக்க முடியும் என்பதற்கு முன்னுதாரணமாக திகழும் தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த திருநங்கை க.பொன்னியின் சிறந்த சமூக பங்களிப்பை பாராட்டியும், தமிழ்நாடு அரசின் 2025ம் ஆண்டிற்கான சிறந்த திருநங்கை விருது மற்றும் தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை மற்றும் பாராட்டு சான்றிதழை முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை செயலகத்தில் வழங்கினார்.

# பிரிவினைவாதத்தை தூண்டுகிறது திமுக.. சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்த பாஜக நயினார் ஆவேசம்

சென்னை, ஏப்.16

சட்டசபையில் இருந்து பாஜக வெளிநடப்பு செய்த நிலையில், தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், திமுக பிரிவினைவாதத்தை தூண்டுகிறது என்று கூறினார். மேலும் 2026 தேர்தலுக்கு பிறகு திமுக ஆட்சியில் இருக்காது என்றும் அவர் கூறினார்.

தமிழக சட்டசபை கூட்டத்தொடர் கடந்த மாதம் 14ஆம் தேதி முதல் நடந்து வருகிறது. அப்போது முதல் நாள் பொது பட்ஜெட்டும், அதற்கடுத்து நாள் வேளாண் பட்ஜெட்தாக்கல்ஆனது.தொடர்ந்து துறை ரீதியான மானிய கோரிக்கை விவாதம் நடந்து வந்தது இந்த நிலையில் 5 நாட்கள் விடுமுறைக்கு பிறகு சட்டசபை இன்று மீண்டும் கூடியது

அப்போது சட்டசபையில் மாநில சுயாட்சி பற்றி பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய மாநில அரசுகளின் உறவுகள் தொடர்பாக ஆராய நீதிபதி குரியன் ஜோசப் தலைமையில் அசோக் வர்தன் ஷெட்டி, பேராசிரியர் நாகநாதன் ஆகியோரை அடங்கிய உயர்நிலைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழு ஜனவரி மாதம் தமது அறிக்கையைத் தாக்கல் செய்யும் என்றார்.

ஒவ்வொரு விஷயத்தையும் மத்திய அரசிடம் போராடி பெற வேண்டியுள்ளது. உரிமைகள் காக்கப்பட்டால்தான் இந்தியா ஒற்றுமையுடன் இருக்கும். இதை உணர்ந்தே மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற முழக்கத்தை திமுக முன்னெடுத்துள்ளது. மாநில சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என தமிழகம் வலியுறுத்துகிறது.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள மாநிலங்களின் நியாயமானஉரிமைகளைபாதுகாக்கவும், ஒன்றியமாநில அரசுகளுக்கிடையேயான உறவுகளை மேம்படுத்திடவும், உச்ச நீதிமன்ற மேனாள் நீதியரசர் திரு.கு.மே. ஜோசப் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு அமைக்கப்படுகிறது என்று சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

அப்போது அதிமுக எம்.எல். ஏக்கள் வெளிநடப்பு செய்தனர். பேசுவதற்கு வாய்ப்பு வழங்கவில்லை என்று கூறி எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆர்.பி. உதயகுமார் தலைமையில் அதிமுகஎம்எல்ஏக்கள்வெளிநடப்பு செய்தனர். இதேபோன்று பாஜகவும் வெளிநடப்பு செய்தது. பாஜக எம் எல் ஏக்கள் நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் வெளிநடப்பு செய்தனர்.

சட்டசபைக்கு வெளியே செய்தியாளர்களை சந்தித்த தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், திமுக பிரிவினைவாதத்தை தூண்டுகிறது என்றும், அனைத்து அதிகாரமும் தனக்கே வேண்டும் என்பதா? என்றும் கேள்வி எழுப்பினார். தொடர்ந்து அவர் கூறியதாவது:

2026சட்டசபை தேர்தலுக்கு பிறகு திமுக ஆட்சியில் இருக்காது. இந்தியா வல்லரசு நாடாக ஆக வேண்டும் என்றால் எல்லா மாநிலங்களும் ஒன்றாகதான் இருக்க வேண்டும்.சட்டமேதைஅம்பேத்கர் என்ன சொன்னார் என்றால் எல்லா மாநிலங்களும் ஒன்றாக இருக்க வேண்டும் அப்போது தான் நாடு வளர்ச்சியடைய முடியும் என்று.

இந்திய நாடு பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டது எதற்காக.. நிர்வாக வசதி சீராக இருக்க வேண்டும் என்பதற்காக தான் அங்க கொண்டு வந்தாங்க. இப்போது இவங்க என்ன பண்றாங்க என்றால், இப்போது இவங்க தான் ஆட்சியில் இருக்கிறாங்க. இன்னும் ஓராண்டு தான் ஆட்சி இருக்கிறது. தேர்தலை முன்னிறுத்தி எதாவது ஒரு தீர்மானம்.. எதாவது ஒன்னு கொண்டு வர வேண்டும் என்று நினைத்துக்கொண்டு இருக்கிறார்கள். இது உண்மையிலேயே மக்களுக்கு விரோதமானது. இந்த தேசத்திற்கு விரோதமானது. வருங்கால நாட்டு மக்களுக்கு செய்யும் விரோதமான செயல். மக்கள் இதை சிந்தித்து புரிந்துகொள்வார்கள். பெண்களை பற்றி மிகமிக அவதூறாக பொன்முடி பேசுகிறார். அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதே இல்லை. அமைச்சர் பதவியில் இருந்து பொன்முடியை நீக்க வேண்டும் என கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து இருக்கிறோம். இன்று தான் கொடுத்திருக்கோம். அதையாவது எடுத்துக்கொள்கிறார்களா என்று பார்ப்போம். இவ்வாறு அவர் கூறினார். அப்போது பாஜக சட்டமன்ற குழு தலைவர் மாற்றம் இருக்குமா என்று செய்தியாளர்கள் கேட்ட கேள்விக்கு பதிலளித்த நயினார் நாகேந்திரன், "மாற்றம் இருந்தால் சந்தோஷம் தானே.. ஒரே ஆளே எல்லா பதவிகளையும் வைத்துக்கொண்டு இருந்தால் என்ன அர்த்தம்" என்று கூறினார்.





# அறந்தாங்கி தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சமுதாய கணக்காளர்களுக்கு மூன்று நாட்கள் பயிற்சி




புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள பதிமூன்று ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சமுதாய கணக்காளர்களுக்கு மூன்று நாள் பயிற்சி வழங்கப்பட்டது. அறந்தாங்கி வட்டார அலுவலக வளாகத்தில் மாவட்ட மகளிர் திட்ட இயக்குநர் ஸ்ருதி ஆலோசனையின் படி நடைபெற்ற கண்காணிப்பு இப்பயிற்சியின் போது பங்கேற்பாளர்கள் மத்தியில் பேசிய உதவி திட்ட அலுவலர் தில்லைமணி இத்திட்டம் மூலம் அடைந்த பயன்கள் குறித்தும், தணிக்கையின் முக்கியத்துவம் குறித்தும், மகளிர் திட்ட செயல்பாடுகள் ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் நோக்கங்கள் செயல்பாடுகள் மற்றும் பொறுப்புகள். நிதி மேலாண்மை நிதி ஆதாரங்களை திரட்டுதல் மற்றும் பல்வேறு பதிவேடுகளை பராமரித்தல் ஆகியவற்றை பற்றிய பயிற்சி எடுத்துரைக்கப்பட்டதுடன், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கு வரப்படும் நிதி விபரங்கள் மற்றும் நிதி மேலாண்மை, சமுதாய முதலீட்டு நிதி மற்றும் இளைஞர் திறன் பயிற்சிகள், வாழ்வாதார திட்டங்கள், வாழ்வாதார சேவை எண் 155330 குறித்தும் எடுத்துரைத்தார்.

மேலும் தணிக்கையின் முக்கியதத்துவம், மகளிர் குழுக்கள், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு, கிராம வறுமை ஒழிப்பு சங்கம் போன்ற சமுதாய அமைப்புகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய உள் தணிக்கைகள், வெளித்தணிக்கை குறித்த விளக்கப்பயிற்சியினை தணிக்கையாளர் ஹரிஷ்வழங்கினார். இப்பயிற்சியின் ஒருங்கிணைப்பு பணிகளை ஆவுடையார் கோயில் வட்டார இயக்க மேலாளர் ஜெயந்தி மேற்கொண்டார்.இதில் ஆவுடையார்கோவில், அறந்தாங்கி மற்றும் மணமேல்குடி வட்டாரங்களை சார்ந்த 30 சமுதாய தணிக்கையாளர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# விக்கிரவாண்டி ஊராசியில் நடைபெறும் வளர்ச்சித் திட்டப் பணிகள்: கலெக்டர் ஆய்வு

விழுப்புரம், ஏப்.16

விழுப்புரம் மாவட்டம், திருவாமாத்தூர் முத்தாம்பிகை உடனுறை அபிராமேஸ்வரர் கோவில், விக்கிர வாண்டி பேரூராட்சிக் குட்பட்ட கக்கன் நகர், விக்கிரவாண்டி அரசு மருத்துவமனை, விக்கிரவாண்டி கால்நடை மருந்தகம், விக்கிரவாண்டி கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம், விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பனையபுரம் ஊராட்சி மற்றும் முண்டியம்பாக்கம் ஊராட்சி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட கலெக்டர் ஷே.ஷேக்அப்துல் ரஹ்மான் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

விக்கிரவாண்டி அரசு மருத்துவமனையின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும் விதமாக, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் வருகைப்பதிவேடு, தொற்றாநோய் பிரிவு, பாத மருத்துவ மையம், உள்நோயாளிகள் பிரிவு, புறநோயாளிகள் பிரிவு, தாய், சேய் நல சிகிச்சைப் பிரிவு, ஆண்கள் மற்றும் பெண்கள் தனி வார்டு பகுதி மற்றும் மருந்தகம் உள்ளிட்டவற்றினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், மருத்துவமனையில் உள்ள அடிப்படை வசதிகளான சுகாதாரமான குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் ஜெனரேட்டர் வசதி உள்ளிட்டவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, முண்டியம்பாக்கம் ஊராட்சியில், முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமானம் திட்டத்தின்கீழ், வீடு மறுகட்டுமானம் செய்திட தேர்வு செய்யப்பட்ட பயனாளி பெரியசாமி, த/பெ.ஆறுமுகம் என்பவரின் வசிப்பிடம் மற்றும் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், வீடுகள் வழங்குவதற்காக தேர்வு செய்யப்பட்ட கனகாம்பரம், க/பெ. பக்கிரி என்பவரின் வசிப்பிடத்தினை நேரில் பார்வையிட்டு பயனாளிகள் விவரம் தொடர்பாக மின்னணு குடும்ப அட்டை, ஆதார் அட்டை ஆகியவை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என மாவட்ட கலெக்டர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் தெரிவித்தார்.

உங்கள் செய்திகள் நிகழ்ச்சிகள்
தினக்கனியில் வர வேண்டுமா
தொடர்புக்கு:9443699066
WHATSAPP CHENEL
DHINAKANI.COM

## கடலோர மாசுப்பாட்டை கண்காணிக்க புதிய டிரோன் உருவாக்கம்

சென்னை, ஏப்.16

கடலோரமாசுபாட்டை கண்காணிக்க கடல்நீர்தரவுகளைச் சேகரிப்பதற்காக தனி பயனாக்கப்பட்ட இரட்டை குவாட்கோப்டர் டிரோனை இந்திய ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். 85 கிலோ உடைய டிரோன் 25 கிலோ வரை சுமைகளை எடுத்துச்செல்லும்.

இதில் மேம்பட்ட கடலியல் சென்சார்கள் பொருத்தப்பட்டுள்ளன. இது தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் ஒரு தொழில்துறை கூட்டாளருடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த டிரோன் நெல்லூர், பாமன்ஜியில் உள்ள என்ஐஓடியின் கடலோர வசதியில் கடல் மாதிரி சேகரிப்பை முடித்து, பின்னர் ஒரு கள செயல்திறன் சோதனையை மேற்கொண்டது. விரைவில், இதேபோன்ற டிரோன்கள் கிழக்கு மற்றும் மேற்கு கடற்கரைகளில் 20 இடங்களில் கடல் தரவு சேகரிக்க இயக்கப்படவுள்ளது. இதுகுறித்து என்ஐஓடியின் கடல் மின்னணுவியல் குழுவின் மூத்த விஞ்ஞானி கூறியதாவது: இந்த டிரோன்கள் தயாராக வாங்கப்பட்டவை அல்ல. கடற்கரை நிலைமைகளுக்கு ஏற்ப, காற்று வீச்சு, நிலைத்தன்மை, பயண நேரம் மற்றும் சுமை தேவைகளை கருத்தில் கொண்டு இவற்றை நாங்கள் வடிவமைத்தோம்.

இந்த டிரோன்கள் கடற்கரையின் நிலப்பரப்பையும் வரைபடமாக்கும். இவற்றின் எடையில் பாதி உயர் திறன் கொண்ட பேட்டரி பேக் ஆகும். இது 3045 நிமிட பயணம் செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவை கடலுக்குள் 2 கிமீ வரை பயணிக்க முடியும், அங்கு அவை தங்கி, வின்ச் முறையைப் பயன்படுத்தி சென்சார்களை நீரில் இறக்குகின்றன," என தெரிவித்தார். இந்த டிரோன் உருவாக்கத்திற்கு என்ஐஓடி இயக்குநர் பாலாஜி ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

அவர் கூறுகையில், சென்னையில் முட்டுக்காடு ஆறு மற்றும் பட்டினப்பாக்கத்தில் கடற்கரை நீர் தரவை நாங்கள் தொடர்ந்து சேகரித்து வருகிறோம்," டிரோன் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், நிலப்பரப்பு, கடல்நீர் கலப்பு மண்டலங்கள் மற்றும் முக்கிய கடல்நதி சந்திப்புகளில் சுற்றுச்சூழல் இயக்கவியலை திறம்பட கண்காணிக்க முடியும் என்றார். இந்த டிரோன், கொல்கத்தா, ஒடிசா, தமிழ்நாடு (சென்னை,முட்டுக்காடு, பட்டினப்பாக்கம்), கேரளா, கர்நாடகா, மும்பை, குஜராத் ஆகிய கடற்கரை பகுதிகளில் பயன்படுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.


## சதுரகிரி மலையில் தவறி விழுந்து 2 பேர் படுகாயம்

வத்திராயிருப்பு, ஏப்.16

மதுரை மாவட்டம், சாப்டூர் அருகே மேற்குத் தொடர்ச்சி மலையில் பிரசித்தி பெற்ற சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோயில் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து சுமார் 4,500 அடி உயரத்தில் அமைந்துள்ள

இந்த கோயிலுக்கு தற்போது தினந்தோறும் பக்தர்கள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

வழக்கம் போல் சதுரகிரி கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்வதற்காக பக்தர்கள் மலையேறி சென்றனர். இதில் காணிப்பாறை கருப்பசாமி கோயில் அருகே வழுக்குப்பாறையில் புதுச்சேரியை சேர்ந்த ராஜ்குமார்(33) தவறி விழுந்து படுகாயமடைந்தார். இதேபோல கோரக்கர் குகை அருகே மற்றொருவர் கீழே விழுந்து காயம் அடைந்தார்.




இருவரும் உடனடியாக மீட்கப்பட்டு வத்திராயிருப்பு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## பவானி அருகே நள்ளிரவில் விபத்து: சிறுவன் ஓட்டிச்சென்ற கார் குடிசையில் பாய்ந்து பெண் பலி

பவானி, ஏப்.16

பவானி அருகே நள்ளிரவில் சிறுவன் ஓட்டிச்சென்ற கார், கட்டுப்பாட்டை இழந்து சாலையோர குடிசைக்குள் புகுந்து பெண் உயிரிழந்தார். ஈரோடு மாவட்டம் அம்மாபேட்டை அருகே பூனாச்சியை சேர்ந்தவர் கருப்பணன் (40). இவரதுமனைவிகற்பகவள்ளி (35). பவானிமேட்டூர் தேசிய நெடுஞ்சாலையில் ஜல்லிக்கல்மேடு அருகே

இளநீர் வியாபாரம் செய்து வந்தனர். அங்கேயே சாலையோரத்தில் குடிசை அமைத்து வசித்துள்ளனர். நேற்று முன்தினம் நள்ளிரவு மேட்டூர் நோக்கி சென்ற கார் கட்டுப்பாட்டை இழந்து மக்காச்சோள கடையில் மோதி, அப்பகுதியில் உள்ள ஓடையை தாண்டி கருப்பணன் வசித்த குடிசைக்குள் புகுந்தது.

இதில், கட்டிலில் படுத்திருந்த கற்பகவள்ளியின் மீது கார் பாய்ந்ததில் சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்தார். குடிசைக்கு வெளியே படுத்திருந்ததால் கருப்பணன் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். போலீசார் வந்து பொக்லைன் இயந்திரம் மூலம் காரை அப்புறப்படுத்தி,

காருக்கு அடியில் சிக்கி இருந்த கற்பகவள்ளியின் சடலத்தை மீட்டனர். விசாரணையில், திருப்பூரை சேர்ந்த 17 வயது சிறுவன், பவானியில் உறவினர்

வீட்டுக்கு வந்து, உறவினரின் காரை ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தியது தெரியவந்தது. சிறுவன் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## கைதிகள் தயாரிக்கும் ஷூக்கள் ஐடி ஊழியர்களுக்கு விற்பனை

வேலூர், ஏப்.16

வேலூர் மத்திய சிறையில் கைதிகள் தயாரிக்கும் ஷூக்களை சென்னையில் உள்ள ஐடி கம்பெனி ஊழியர்களுக்கு விற்பனை செய்துள்ளனர். தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகள் என்பது தண்டனைக்குரிய இடங்களாக இல்லாமல் சீர்திருத்தும் பள்ளிகளாக மாற்றுவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக சிறைகளில் இருந்து கைதிகள் விடுதலையான பிறகு அவர்களது எதிர்காலம் பாதிக்காமல் இருக்க பல்வேறு தொழில்கள் கற்றுக்கொடுக்கப்படுகிறது.

மேலும் கைதிகளின் மனமாற்றத்துக்கான நூலகம், விளையாட்டு போட்டிகளுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதன்படி, மத்திய சிறைகளில் உள்ள நன்னடத்தை கைதிகள் ஷூ தயாரிப்பு, தையல், சோப்பு, பேக்கரி, விவசாயம், மீன் வளர்ப்பு, தச்சு, முடி திருத்தகம் உள்ளிட்ட பல்வேறு சுயதொழில்கள் செய்து வருகின்றனர்.



வேலூர் மத்திய சிறையில், உள்ள நன்னடத்தை கைதிகள் போலீசாருக்கான ஷூக்கள் தயாரித்து வழங்கி வந்தனர். இதன்மூலம் ஷூ தயாரிப்பில் உள்ள கைதிகள் ஆண்டுக்கு அதிகபட்சமாக ரூ.3 லட்சம் ஊதியம் பெறுகின்றனர்.

இதற்கிடையில், கைதிகள் தயாரிக்கும் ஷூக்களை போலீசாருக்கு மொத்தமாக கொள்முதல் செய்வது நிறுத்தப்பட்டது. இதையடுத்து, இந்த ஷூக்களை போலீஸ் கேன்டீன் மற்றும் சூப்பர் மார்க்கெட்டில் விற்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையில், கைதிகள் தயாரித்த ஷூக்கள் சென்னையில் உள்ள ஒரு ஐடி கம்பெனி ஊழியர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும், மற்ற ஐடி கம்பெனி ஊழியர்களுக்கு ஷூக்கள் விற்பனை தொடர்பாக பேச்சு வார்த்தை நடந்து வருகிறது. இதுகுறித்து சிறைத்துறை அதிகாரிகள் கூறுகையில், 'கைதிகள் தயாரிக்கும் ஷூக்கள் போலீசார் மட்டுமின்றி பொதுமக்களுக்கு விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, சென்னையில் உள்ள ஐடி நிறுவனத்தில் 150 ஷூக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் சென்னை தீவுத்திடலில் கண்காட்சியில் கைதிகள் தயாரித்த ஷூக்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, பல டிசைன்களில் ஷூக்கள் தயாரிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. பெல்ட், மணிபர்ஸ், லேதர் பேக், லேடிஸ் பை, லேப்டாப் பேக் உள்ளிட்டவை தயாரித்து விற்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்றனர்.

## தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்த பாஜவுடன் கூட்டு எட்டப்பன் ஆகிவிட்டார் எடப்பாடி: முத்தரசன் தாக்கு

நாகப்பட்டினம், ஏப்.16

தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்கிறது ஒன்றிய பாஜ அரசு. பாஜவுடன் கூட்டணி வைத்து எடப்பாடி பழனிசாமி எட்டப்பன் ஆகிவிட்டார் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் முத்தரசன் கூறினார்.



நாகப்பட்டினத்தில் அகில இந்திய விவசாயிகள் சங்கம் சார்பில் 30வது தேசிய மாநாடு இன்று (15ம் தேதி) தொடங்கி 17ம் தேதி வரை 3 நாட்கள் நடக்கிறது. மாநாடு பணிகளை நேற்று பார்வையிட்ட இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் முத்தரசன் அளித்த பேட்டி:

நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பு இருந்தே பாஜவுடன் எக்காலத்திலும் ஒட்டும் இல்லை,

உறவும் இல்லை, கூட்டணி வைக்கப் போவதும் இல்லை என எடப்பாடி பழனிசாமி, முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறிவந்தனர். ஆனால் திடீரென பாஜவுடன் கூட்டணியால் தான் மக்களுக்கு எதையும் செய்ய முடியும். அதனால் என்ன விளைவுகள் வந்தாலும் அதை எதிர்கொள்வோம் எனஎடப்பாடிகூறுகிறார். எடப்பாடி நிர்பந்தம் காரணமாகவே பாஜவுடன் கூட்டணி வைத்துள்ளார்.

அமலாக்கத்துறை சோதனைக்கு பயந்த காரணத்தால் எடப்பாடி பாஜவுடன் கூட்டணி வைத்துள்ளனர். பாஜவுடன் கூட்டணி வைத்த சரத்பவர் கட்சி, சிவசேனா கட்சியின் நிலை என்ன ஆனது. பாஜ தன்னுடன் கூட்டணி வைத்துள்ள கட்சியை நயவஞ்சமாக அழித்துவிடும். தமிழ்நாட்டிற்கு துரோகம் செய்யும் ஒன்றிய அரசை தமிழக மக்களே எதிர்க்கின்றனர். பாஜவுடன் கூட்டணி வைத்து தமிழகத்தை காட்டிக் கொடுத்த எட்டப்பன் ஆகிவிட்டார் எடப்பாடி.

ஜெயலலிதா மீது ஊழல் குற்றச்சாட்டு நீதிமன்றத்தால் நிருபிக்கப்பட்டு தண்டனை அளிக்கப்பட்டுள்ளது. ஜெயலிதாவின் ஊழல் குறித்து அண்ணாமலை பேசினார்.

இன்று கூட்டணி வைத்துள்ள காரணத்தால் அதிமுகவினர் ஊழல் செய்யவில்லை என பேசுவார்களா? அதிமுக போன்ற கரை படிந்த கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டு, ஊழல் பற்றி பேச உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு தகுதியில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.

## ஆறு, ஏரியில் மூழ்கி சிறுவர், சிறுமிகள் 7 பேர் பரிதாப பலி

சென்னை, ஏப்.16

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அடுத்த ரம்ஜான் தைக்கால் ஜாகிர்உசேன்நகரை சேர்ந்த முஹிபுல்லா மகன் உபயத்துல்லா (8), 4ம் வகுப்பும், ஜாபர் சாதிக் மகன் முகமதுஅபில் (10) 5ம் வகுப்பும், சாதிக் மகன் சேக் அப்துர்ரஹ்மான்(13) 8ம் வகுப்பும் படித்து வந்தனர். நண்பர்களான 3 பேரும் நேற்று விடுமுறை என்பதால் வெள்ளையங்கால் ஓடையில் குளிக்க சென்றுள்ளனர். அப்போது மூவரும் நீரில் மூழ்கி பலியாகினர்.

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை ராம்நகர் பகுதியை சேர்ந்த முத்தப்பா மற்றும் அவரது உறவினரான பெங்களூரு சர்ஜாபூர் பகுதியை சேர்ந்த சென்னப்பன் ஆகிய இருவரும் குடும்பத்துடன், ஒகேனக்கல்லுக்கு நேற்று சுற்றுலா சென்றுள்ளனர். ஆலம்பாடி காவிரி ஆற்றில் குடும்பத்துடன் குளித்தனர்.

அப்போது முத்தப்பா மகள் பாக்கியலட்சுமி(10), சென்னப்பா மகள் காவியா(16) ஆகிய இருவரும் நீரில் மூழ்கி உயிரிழந்தனர். கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் அடுத்த பாசார் கிராமத்தை சேர்ந்த சேகர் மகள் ஸ்வேதா (12) 7ம் வகுப்பும் சிவக்குமார் மகள் சிவசக்தி (11) 6ம் வகுப்பும் படித்து வந்தனர். விடுமுறை என்பதால் நேற்று மாலை 10க்கும் மேற்பட்ட பள்ளி சிறுமிகளுடன் ஏரியில் குளிக்க சென்றனர். அப்போது ஸ்வேதா மற்றும் சிவசக்தி ஆகியோர் நீரில் மூழ்கி இறந்தனர்.

## பாஜ கூட்டணி ஏற்க மறுப்பு அதிமுக நிர்வாகி ராஜினாமா

புதுக்கோட்டை. ஏப்.16

புதுக்கோட்டைமாவட்டம் ஆலங்குடியைச் சேர்ந்தவர் கே.எஸ். முகமதுகனி. அதிமுக சிறுபான்மை பிரிவு நகர செயலாளர். அதிமுக, பாஜவுடன் கூட்டணி வைத்து இருப்பதை ஏற்க மறுத்து, முகமது கனி அக்கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து ராஜினாமா செய்துள்ளார்.

அதற்கான கடிதத்தை அக்கட்சியின் மாவட்ட செயலர் மாஜி அமைச்சர் விஜபாஸ்கருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பியுள்ளார். அதிமுக தலைவர்களை கடுமையாக



விமர்சனம் செய்ததோடு தமிழகத்துக்கு நிதி ஒதுக்காமல், தமிழக வளர்ச்சிக்கு எதிராக பல்வேறு சட்டங்களை கொண்டு வந்த பாஜவோடு அதிமுக கூட்டணி வைத்ததில் உடன்பாடு இல்லாததால் ராஜினாமா செய்ததாக அவர் கூறியுள்ளதாக கூறப்படுகிறது.

## மின்சாரம் தாக்கி தம்பதி, பாட்டி பலி 2 பேர் படுகாயம்


விருதுநகர், ஏப்.16

விருதுநகர் அருகே காரிசேரி கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயில் திருவிழாவின் 45வது நாள் பூஜை நேற்று நடைபெற இருந்தது. இதற்காக மைக்செட் கட்டும் பணியில் அதே பகுதியை சேர்ந்த மைக்செட் உரிமையாளர் திருப்பதி(28) நேற்று மதியம் ஈடுபட்டிருந்தார். அப்போது வயரின் மறுமுனையை நடுவில் சென்ற ஒருவயருக்கு மேல் தூக்கி போட்டுள்ளார். அது அங்குள்ள டிரான்ஸ்பார்மரின் உயர் மின்னழுத்த வயரில் பட்டதில் மின்சாரம் பாய்ந்து, திருப்பதி அலறினார்.

சத்தம் கேட்டு 7 மாத கர்ப்பிணியான அவரது மனைவி லலிதா(25) ஓடி வந்து காப்பாற்ற முயன்றார். இதில் மின்சாரம் இவர் மீதும் தாக்கியது. இவர்களின் சத்தம் கேட்டு காப்பாற்ற வந்த திருப்பதியின் பாட்டி பாக்கியம்(65) மீதும் மின்சாரம் தாக்கியது.

இதில் மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், திருப்பதியின் தம்பி தர்மர்(22), உறவினர் மகன் கவின்மாதவன்(17) ஆகியோரும் காயம் அடைந்தனர்.

## காட்டு யானைகள் அடிக்கடி விசிட் கொடைக்கானல் பேரிஜம் ஏரி பகுதிக்கு அனுமதி 'கட்'



கொடைக்கானல், ஏப்.16

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் முக்கிய சுற்றுலாத்தலமாக பேரிஜம் ஏரி உள்ளது. இத்தலமானது வனத்துறை கட்டுப்பாட்டில் இருப்பதால், நாள்தோறும் குறிப்பிட்ட அளவிலான சுற்றுலாப்பயணிகள் செல்ல வனத்துறையினர் அனுமதி வழங்குவர். பேரிஜம் ஏரிப்பகுதியில் கடந்த சில நாட்களாக காட்டு யானைகள் முகாமிட்டுள்ளன. இதனால் கடந்த இரண்டு நாட்களாக வனத்துறை அலுவலகத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு பேரிஜம் செல்ல அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது.

முறையான அறிவிப்பு வனத்துறை சார்பில் வெளியிடப்படாததால், உள்ளூர் வாகன ஓட்டிகளும், சுற்றுலா பயணிகளும் பேரிஜம் ஏரிப் பகுதியை காண முடியாமல் செல்கின்றனர். இதனை வனத்துறையினர் முறைப்படுத்தி பேரிஜம் ஏரி பகுதியில் காட்டு யானைகள் முகாமிடும் நேரங்களில் உரிய அறிவிப்பு வெளியிட வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

யானைகள் இந்த பகுதியை விட்டு வேறு பகுதிக்கு சென்றால் தான் பேரிஜம் வனப்பகுதிக்கு சுற்றுலாப் பயணிகள் அனுமதிக்கப்படுவார்கள்.மாதம்ஒருமுறையோ அல்லது 2 முறையோ இந்த பகுதிக்கு யானைகள் வருவது தற்போது வாடிக்கையாக மாறி வருகிறது. தினம்தோறும் யானைகளின் நடமாட்டம்கண்காணிக்கப்பட்டு வருகிறது என்று வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

## துணை முதல்வர் பதவி பற்றி அதிமுகவுடன் பேசப்பட்டதா? நயினார் நாகேந்திரன் பேட்டி



நெல்லை, ஏப்.16

அதிமுகவிடம் துணை முதல்வர் பதவி பற்றி பேச்சுவார்த்தை நடந்ததா என்று பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் எம்எல்ஏ பேட்டி அளித்தார். நெல்லையில் அம்பேத்கர் சிலைக்கு பாஜ மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது: அதிமுகவுடன் எந்தவித இழுபறியும் இல்லாமல் பாஜ கூட்டணி அமைத்துள்ளது.

இந்தக் கூட்டணி வருகிற சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெறும். தேர்தலுக்கு இன்னும் ஒரு வருட காலம் உள்ள நிலையில் துணை முதல்வர் பதவி உள்ளிட்டவை குறித்து அதிமுகவுடன் நாங்கள் எவ்வித பேச்சு வார்த்தையும் நடத்தவில்லை. அத்தியாவசிய துறையான போக்குவரத்து துறையில் ஏற்படக்கூடிய நஷ்டத்தை அரசு முறையாக நிதி ஒதுக்கி சரி செய்ய வேண்டும். இவ்வாறு தெரிவித்தார்.

## பெண் இன்ஸ்பெக்டர் கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றம்

கோவை, ஏப்.16

கோவை விமானநிலையத்துக்கு சில நாட்களுக்கு முன்பு வெளிநாட்டில் தேனிலவு முடித்துவிட்டு புதுமண தம்பதி வந்தனர். அங்கு காத்திருந்த ஒரு இளம்பெண் அந்த புதுமாப்பிள்ளையிடம் தகராறில் ஈடுபட்டார். தன்னை திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றிவிட்டு வேறொரு பெண்ணை திருமணம்செய்துகொண்டதாக புதுமாப்பிள்ளை மீது அந்த இளம்பெண் குற்றம்சாட்டினார்.

அந்த புதுமாப்பிள்ளை தனது மனைவியுடன் அங்கிருந்து சென்றுவிட்டார். விமான நிலையத்தில் இளம்பெண் ரகளை செய்த வீடியோ காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலானது. முன்னதாக இளம்பெண் புது மாப்பிள்ளை மீது கோவை கிழக்கு மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். இன்ஸ்பெக்டர் ருக்மணி புது மாப்பிள்ளைக்கு ஆதரவாக செயல்பட்டதாக தெரிகிறது. இந்நிலையில் அவரை கட்டுப்பாட்டு அறைக்கு மாற்றி கமிஷனர் உத்தரவிட்டுள்ளார்.

## இஸ்லாமியர்கள் பாஜவுக்கு எதிராக போராட வேண்டும்: திருமாவளவன் வலியுறுத்தல்

பண்ருட்டி, ஏப்.16

கடலூர் மாவட்ட தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை சார்பில் வக்பு சட்ட திருத்த மசோதாவை கண்டித்து பொதுக்கூட்டம் பண்ருட்டியில் நேற்று நடந்தது. கூட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் பேசியதாவது: வக்பு திருத்த சட்டத்தை திரும்ப பெறும்வரை சோர்ந்து விடக்கூடாது. நம்பிக்கை இழந்து விடக்கூடாது. இந்த சட்டத்தை திரும்ப பெறவைக்க முடியும். பாசிச கும்பல் இஸ்லாமியர்களை அந்நியர்களைப் போன்ற ஒரு தோற்றத்தை உருவாக்குகிறார்கள். இந்த தேசம் எங்களுக்கான தேசம் என ஆட்சியாளர்களுக்கு மிகப் பெரும் அச்சுறுத்தலை உருவாக்க வேண்டும். வன்முறை தேவையில்லை. வேளாண் விவசாயிகள் ஒரு துளி வன்முறைகூட இல்லாமல் தொடர்ந்து அமைதியானவழியில் போராட்டம் நடத்தி ஆணவம் கொண்ட இந்த ஆட்சியாளர்களை மன்னிப்பு கேட்க வைத்தார்கள். பஞ்சாபில் தோல்வி பெறசெய்தார்கள். சட்டத்தை திரும்பப் பெற வைத்தார்கள். இந்துக்களை இஸ்லாமியர்களுக்கு எதிராக திருப்புகிறார்கள். இஸ்லாமியர்கள் பாஜவுக்கு எதிராக போராட வேண்டுமே தவிர இந்து சமூகத்திற்கு எதிராக அல்ல. இவ்வாறு அவர் பேசினார்.

# கார் மோதி சிறுவன், சிறுமி பரிதாப பலி

சாயல்குடி, ஏப்.16

ராமநாதபுரம் மாவட்டம், சாயல்குடி, அங்காள பரமேஸ்வரி அம்மன் கோயில் தெருவை சேர்ந்த சொர்ணராஜன் மகள் சண்முகப்பிரியா(13), குகன் மகன் ஹரி சூர்யா பிரகாஷ்(14). இருவரும் 8ம் வகுப்பு படித்து வந்தனர். இவர்கள், நேற்று முன்தினம் இரவு சாயல்குடி பத்திரகாளியம்மன் கோயில் திருவிழா சப்பர ஊர்வலத்தில் பெற்றோருடன் சென்று தரிசனம் செய்தனர். பின்னர் நள்ளிரவில் வீடு திரும்பி கொண்டிருந்தபோது சாயல்குடி காவல் நிலையம் அருகே கிழக்கு கடற்கரை சாலையில் நடந்து சென்ற அவர்கள் மீது ராமநாதபுரத்தில் இருந்து தூத்துக்குடி சென்ற கர்நாடக மாநிலத்தை சேர்ந்த கார் மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட சண்முகப்பிரியா சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பலத்த காயமடைந்த ஹரி சூரியபிரகாஷ், ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்நேற்றுஇறந்தார்.

# அனைத்திந்திய கட்டிட பொறியாளர்கள் சங்கத்தின் 51 ஆவது புதிய கிளை திறப்பு விழா மற்றும் நிர்வாகிகள் பதவியேற்பு விழா




அனைத்திந்திய கட்டிட பொறியாளர்கள் சங்கத்தின் 51 ஆவது புதிய கிளை திறப்பு விழா மற்றும் நிர்வாகிகள் பதவியேற்பு விழா... காரைக்குடி தனியார் ஹோட்டலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் புதியதலைவராககாரைக்குடியைச் சேர்ந்த மூத்த பொறியாளர் முருகேசன் தலைவராக பதவி ஏற்று கொண்டார்

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் அனைத்திந்திய பொறியாளர் சங்கத்தின் 51 வது புதிய கிளை காரைக்குடியில் துவங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் அகில இந்திய கட்டிட பொறியாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் ராஜேந்திர கல்பாவி ராவ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். இச்சங்கத்தின் காரைக்குடி கிளை புதிய தலைவராக மூத்த பொறியாளர் காரைக்குடியை சேர்ந்த சி. முருகேசன் பதவியேற்றுக்கொண்டார். செயலாளராக பா வருண், பொருளாளராக சுப்ரமணியன் தேர்வு செய்யப்பட்டனர்

இந்நிகழ்ச்சியில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

# மதுரை மாநகர் தல்லாகுளம் பகுதியில் கோகுல ரஸ்தாவில் மிக பிரமாண்டமான கோத்ரேஜ் Interio Summer chill deals ஷோரும் திறப்பு விழா



மதுரை மாநகர் தல்லாகுளம் பகுதியில் கோகுல ரஸ்தாவில் மிக பிரமாண்டமான கோத்ரேஜ் Interio Summer chill deals ஷோரும் இன்று திறப்பு விழா இனிதே ஆரம்பிக்கப்பட்டது இந்த பிராமாண்ட ஷோருமி னை மிக அனைத்து தொழில்களிலும் மைல்கல்லாக சிறந்து விளங்கும் திருவாளர்கள் சாந்தி & ராமசந்திரன் அவர்கள் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்கள். இதனை தொடர்ந்து கோத்ரேஜ் இன்ட்ரியோ தெற்கு மண்டல தலைமை யாளர் எம். Asit Pathy அவர்கள் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார் உடன் கோத்ரேஜ் இன்ட்ரியோ கம்பெனி நிறுவனத்தை சார்ந்தவர் கள் மேலாளர் திருவாளர்விக்ரம்அண்டு குழுவினர், மேலாளர் மோகன்கார்த்திக்அண்டு குழுவினர் Noble Poliishing, MD தினகரன் உச்சபட்டி ஞான சித்தர் பீடம் பால கிருஷ்ணன் partner Sutidio Amino and Thayumanavan Associates ராஜா முத்தழகு, தங்க கணேஷ், சண்முகம் அவர்களையும் மற்றும் குடும்பத்தினர், உறவினர் கள்நண்பர்கள்ஆகியோர் களையும் கலந்து ,கொண்ட மிக பிரமாண்டமான அனைவரையும் வரவேற்று இந்த ஷோரூமின் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இதில் முக்கிய உலக தரம் வாய்ந்த கோத்ரேஜ் கம்பெனி தாரர்களையும் / மற்ற அனைவரையும் இந்த சிறந்த நாளில் Sara Agencies உரிமையாளர் Nirmal & Abi அவர்கள் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்தார் Godrej Inerio 35% சதவீத ஆப்பர் உடன் இந்த ஷோரூமில் இன்றைய நாகரீக காலதிற்குக்கு ஏற்ப பல மாடல்களில் டைனிங் டேபிள், சொகுசு மெத்தை வித விதமான தலையனைகளுடன், விற்பனைக்கும் ஸ்டீல் பீரோ ஆகிய பொருட்கள் நமது வீட்டை அலங்கரிக்கும் பொருட்டு அனைத்து வீட்டு உபயோக சாதனங்கள் சிறந்த முறையில் விற்பனைக்கு வைக்கப் பட்டுள்னர் இதில் 35% சதவீ தள்ளுபடியும் செய்து தருகிறார்கள்

# மதுரை மாநகர் சிந்தாமணி பகுதியில் உள்ள மண்டபத்தில் அண்ணல் சட்ட மாமேதை அம்பேத்கர் 135 வது பிறந்தநாள் சமத்துவ நாள் விழா



மதுரை மாநகர் சிந்தாமணி பகுதியில் உள்ள மண்டபத்தில் அண்ணல் சட்ட மாமேதை அம்பேத்கர் அவர்களின் 135 வது பிறந்தநாள் சமத்துவ நாள் விழாவினை முன்னிட்டு 89 வது வார்டு சிந்தாமணியில் மதுரை தெற்கு மாவட்ட மகளிரணி சார்பாக மாவட்ட அமைப்பாளர் மதுரை தெற்கு மாவட்ட திமுக மகளிர் அணி கிருத்திகா தங்கப் பாண்டி அவர்களின் ஏற்பாட்டில் திராவிட முன்னேற்ற கழக தெற்கு மாவட்ட செயலாளர் மு. மணிமாறன்அவர்களின் தலைமையில் சமத்துவ சூரியன் அண்ணல் அம்பேத்கரின் சமத்துவ நாள் விழா விணை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் சுமார் 500 க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு வழங்கினர் இவ்விழாவில் தெற்கு மாவட்ட மகளிரணி துணை அமைப்பாளர் N. ரதி, அவனி கிழக்கு பகுதி அவைத் தலைவர் P.M. கணேசன். 89 வது வட்ட செயலாளர் வழக்கறிஞர் P.M.G சரத்குமார் 89 வது வட்ட பிரதிநிதி முருகன் முத்து, அருண்குமார், ராஜா, மணி, தெற்கு மாவட்ட சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர் 89 வது வட்ட பிரதிநிதிகள் அ ர்ச்சுனன் தங்கராஜ் பாண்டுரங்கன் மணிமாறன் குணசீலன் மற்றும் பலருக்கும் மேற்பட்ட தி.மு.க நிர்வாகிகள், கட்சி பிரமுகர்கள் மகளிர் அணியினர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# ஆயிரம் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள், மற்றும் மாட்டுவண்டி எல்கைப்பந்தயம்... சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டத்தில் ஒன்றியக்கழக செயலாளர் டாக்டர் ம. ஜெயராமன் தகவல்




சிவகங்கை மாவட்ட திமுக செயலாளரும், மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் அவர்களின் ஆலோசனையின் பேரில் சிவகங்கை தெற்கு ஒன்றிய செயற்குழு கூட்டமானது ஒன்றியக்கழக செயலாளர் டாக்டர் ம. ஜெயராமன் தலைமையிலும், பொருளாளர் அரசு ஒப்பந்ததாரர் உசிலம்பட்டி பாண்டியராஜா, துணைச்செயலாளர் சித்தலூர் முருகன், மாவட்ட பிரதிநிதிகள் அரசனூர் தியாகராஜன், மனோகர் சாமிநாதன், மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் ம. சிங்கமுத்து, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வண்டவாசி தங்கம் ஆகியோரது முன்னிலையிலும் சிறப்பாக நடைபெற்றது..

செயற்குழுவில் பேசிய ஒன்றிய செயலாளர் வருகின்ற 20.4.2025 அன்று நடைபெறுகின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் , கழகத்தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் எனவும் அதற்காக பிரம்மாண்ட முறையில் ஆயிரம் பெண்களுக்கு மேல் நலத்திட்ட உதவிகள் மற்றும் மாட்டுவண்டி எல்கைப்பந்தயம், கலை நிகழ்ச்சிகள், மற்றும் நாவுக்கரசர் நாஞ்சில் சம்பத் கலந்து கொள்ளும் உள்ளிட்ட நிகழ்ச்சிகளை சிறப்பாகவும் பிரம்மாண்டமாகவும் நடத்துவது , அதேபோல் ஒன்றியக்கழக சார்பு அணி பொறுப்புகளுக்கான நிர்வாகிகளை நிரப்புவது உள்ளிட்ட கழக விசயங்களை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்..

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட திமுக ஐடி விங் துணை அமைப்பாளர் வாடிவாசல் முத்துவேல்செல்வம், மாநில மாற்றுத்திறனாளிகள் ஆணைய உறுப்பினர், தாய் தவழும் மாற்றுத்திறனாளிகள்இல்லபுஷ்பராஜ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சாமியார் பட்டி பிரவீன், பொன்னழகு என்ற ஏழுமலை, மூக்குத்தி பாலா, மாத்தூர் செல்வம், பொறியாளரணி எட்மண்ட் சுரேஷ், மாரிக்கண்ணன், மானாகுடி அய்யப்பன், ஜி ஆர். சிலம்பரசன், செல்லப்பாண்டி, கூலு, கோமாளிபட்டி அழகர், இளைஞரணி துணை அமைப்பாளர்கள் அழகு சுந்தரம் செம்பூர் ஆறுமுகம், , தம்பிதுரை சேகர், அரசனூர் செந்தில், ஒன்றியக்கழக நிர்வாகிகள் டாமின் குமார், கல்குளம் பாலுச்சாமி, பொன்னம்பலம், தங்கச்சாமி, குறிஞ்சி நகர் செந்தில், கொட்டகுடி சம்பத், கார்த்திகேயன், ஆனந்தராஜ், சமயத்துரை, சேது வி ஏ ஓ, மேனாள் கவுன்சிலர்கள் மாத்தூர் ரமேஷ், கோவானூர் வேல்முருகன், மகளிரணி கொட்டகுடி விஜயா, மஞ்சுளா, வெல்டிங் செந்தில் உள்ளிட்ட ஏராளமான ஒன்றிய, கிளைக்கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

# சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் பிறந்தநாள், ஒன்றியக்கழக நிர்வாகிகள் சிறப்பாக கொண்டாடினர்




சிவகங்கை திமுக தெற்கு ஒன்றியக்கழக செயலாளர் டாக்டர் ம.ஜெயராமன் அவர்களது 51 வது பிறந்தநாள் விழாவினை சிவகங்கை தெற்கு ஒன்றியக்கழக நிர்வாகிகள் சிறப்பாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

சிவகங்கை தெற்கு ஒன்றிய திமுக செயற்குழு கூட்டமானது இன்று காலை சிறப்பாக நடைபெற்றது.

இதனிடையே கழகநிர்வாகிகள் டாக்டர் ஜெயராமனுக்கு பிறந்தநாள் வாழ்த்துகளை தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் மாநில மாற்றுத்திறனாளிகள் ஆணைய உறுப்பினர் புஷ்பராஜ், ஒன்றிய பொருளாளர் அரசு ஒப்பந்ததாரர் பாண்டியராஜா , துணைச்செயலாளர் சித்தலூர் முருகன், மாவட்ட பிரதிநிதிகள் மனோகர் சாமிநாதன் , அரசனூர் தியாகராஜன், மாவட்ட ஆதிதிராவிடர் அணி சிங்கமுத்து, மாவட்ட ஐடி விங் வாடிவாசல் முத்து வேல்செல்வம், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி பிரவீன், ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் கூத்தாண்டன் கே. எஸ். சரவணன், மூக்குத்தி பாலா, இளைஞரணி வண்டவாசி தங்கம், அழகுசுந்தரம், ஆறுமுகம், சிலம்பரசன், பாலுச்சாமி, மாரிக்கண்ணன், செல்லப்பாண்டி, பொன்னழகு ஏழுமலை, தங்கச்சாமி, அறங்காவலர் முளைக்குளம் அய்யனார், இலுப்பக்குடி முத்துச்சாமி, எட்மண்ட் சுரேஷ், மானாகுடி அய்யப்பன், செந்தில், மேனாள் கவுன்சிலர்கள் மாத்தூர் ரமேஷ், கோவானூர் வேல்முருகன், பொன்னம்பலம் , ஜெயவேல், மெடிக்கல் பாரத், தொமுச செம்பூர் காட்டு ராஜன், விஜயா , சம்பத், கார்த்திக், கணேசன், ,ஆனந்தராஜ், தம்பிதுரை, உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

டாக்டர் ஜெயராமன் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவாக அறுசுவை அசைவ உணவு பரிமாறப்பட்டது.

# கல் குவாரி, கிரஷர் & லாரி உரிமையாளர்கள் சங்கம், தமிழ்நாடு



தமிழக அரசின் கவனஈர்ப்புக்கான மாநிலம் தழுவிய வேலை நிறுத்தம் கோரிக்கைகள்1) குவாரியில் இருந்து கல் உடைத்து எடுத்து வர கொடுக்கும் நடைச்சீட்டுக்கு அரசுக்கு வரியாக இதுவரை கனமீட்டர் அடிப்படையில் இருந்தது. தற்சமயம் மெட்ரிக் டன் முறையில் அமல்படுத்தி 05.09.2023 அன்று ஒரு யூனிட்டுக்கு ரூ.330 + GST என்று இருந்ததை 12.03.2025 ரூ.604+GST என்று மாற்றியும் தற்போது மெட்ரிக் டன் முறையில் ரூ.1347 + GST என்று மாற்றி வசூல் செய்யும் முறையை ரத்து செய்து பழைய கனமீட்டர் முறையை அமல்படுத்தக்கோரியும்2) மற்ற மாநிலங்களில் இல்லாத புதிய வரியான சிறு கனிம நில வரியை ரத்து செய்து உத்திரவிட கோரியும்3) ஏற்கனவே எங்கள் சங்கத்தின் மூலம் பல முறை கோரிக்கைகளாககொடுக்கப்பட்ட 24அம்ச கோரிக்கைகளை நிறைவேற்றி தரும்படி கேட்டு நாளை 16.04.2025 முதல் தமிழகம் முழுவதும் அனைத்து குவாரி கிரஷர்களும் மற்றும் எம்.சான்ட் உற்பத்தியாளர்கள் சங்கம் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் அறிவிக்கப் படுகிறது.

# வக்ஃபு வாரிய திருத்த சட்டத்தை திரும்பப்பெற வேண்டும்: ஜமாஅத்துல் உலமா சபை கோரிக்கை



தஞ்சாவூர், ஏப். 16

தஞ்சை கீழவாசல் ஆட்டுமந்தை தெருவில் மாநகர வட்டார ஜமாஅத்துல் உலமா சபை சார்பில் கண்டன பொதுக்கூட்டம் நடந்தது.. கூட்டத்திற்கு சபைத் தலைவர் சையது அபுதாஹீர் தலைமை தாங்கினார். வல்லம் பெரிய பள்ளிவாசல் இமாம் முகமது ரஃபீக் கிராஅத் செய்தார். பொருளாளர் ஷா நவாஸ் வரவேற்றார்.

மாவட்ட தலைவர் ஹாஜா முஹைத்தீன் தொடக்க உரையாற்றினார். கூட்டத்தில் முன்னாள் மத்திய அமைச்சர் எஸ். எஸ். பழநி மாணிக்கம், தஞ்சை சட்டமன்ற தொகுதி உறுப்பினர்

டி.கே.ஜி. நீலமேகம், மாநிலத் துணைத் தலைவர் ஜியாவுதீன், ஆரணி அரபிக் கல்லூரி அகமது அலி, தமிழ்நாடு சிறுபான்மை மக்கள் நலக்குழு மாநில செயலாளர் செந்தில்குமார் ஆகியோர் கண்டன உரை ஆற்றினர். பின்னர் மத்திய அரசு கொண்டுவந்துள்ள வகுப்பு வாரிய திருத்த சட்டத்தை ஒன்றிய அரசு பெற வேண்டும்.

இந்த சட்டத்தை மத்திய அரசு உடனே திரும்ப பெற வேண்டும் என்று தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியதற்கு தமிழக முதலமைச்சருக்கும், தீர்மானத்தை ஆதரித்த கட்சிகளுக்கும் நன்றி தெரிவிப்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தின் இடை இடையில் மத்திய அரசை கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டது. முடிவில் தஞ்சை காதிரிப்பா பள்ளிவாசல் இமாம் செய்யது இப்ராஹிம் நன்றி கூறினார். நிகழ்ச்சிகளை தஞ்சை மாநகர வட்டார ஜமாஅத்துல் உலமா சபை செயலாளர் முஹம்மது அலி தொகுத்து வழங்கினார்..

# உருகி உருகி காதலித்த காதலி வேண்டாம் என்று கூறியதால் ஆத்திரம் வீடுதேடி சென்று காதலியை அரிவாளால் வெட்டிய காதலன்



தென்காசி ஏப்16

தென்காசி மாவட்டம், செங்கோட்டை அருகே உள்ள கற்குடி பகுதியை சேர்ந்தவர் திருமலைக்குமார். இவருக்கும் தெற்குமேடு பகுதியை சேர்ந்த கண்ணகி (வயது 25) (பெயர் மாற்றப்பட்டுள்ளது) என்ற பெண்ணுக்கும் இடையே கடந்த சில வருடங்களுக்கு முன்பு காதல் மலர்ந்த நிலையில், இருவரும் பல்வேறு இடங்களில் சுற்றித்திரிந்து தங்களது காதலை வளர்த்து வந்துள்ளனர். இந்த நிலையில், கண்ணகி ஆசைப்பட்டாள் என்பதற்காக அவள் ஆசைப்படி அழகான வீடு ஒன்றை திருமலைக்குமார் கட்டிய நிலையில் கண்ணகி என்ன சொல்கிறாரோ அதையெல்லாம் கேட்கும் நல்ல பையனாக திருமலைக்குமார் இருந்து வந்துள்ளார். திடீரென கண்ணகி மநிலை மாறியுள்ளது திருமலைக்குமாரின் காதலை சமீப காலமாக ஒதுக்கி வந்துள்ளார். இது தொடர்பாக, திருமலைக்குமார் கேட்டபோது உன்னுடன் பழக எனக்கு விருப்பமில்லை என்ற வார்த்தையும் கண்ணகி கூறிய நிலையில், இதனால் திருமலைக்குமார் கடுமையான மன வேதனைக்கு ஆளானதாக கூறப்படுகிறது. மனவிரக்தியில் இருந்த திருமலைக்குமார் தனது வீட்டில் இருந்த அரிவாளை எடுத்துக்கொண்டு கண்ணகி வீடு தேடி சென்று அவளை சரமாரியாக வெட்டியுள்ளார். இதில் படுகாயம் அடைந்த கண்ணகியை மீட்டு போலீசார் சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்த நிலையில், அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக நெல்லை அரசு மருத்துவமனைக்கு கண்ணகி அனுப்பி வைக்கப்பட்டார். தற்போது அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வரும் நிலையில், இந்த சம்பவம் தொடர்பாக புளியரை போலீசார் வழக்குப்பதிவு செய்து கண்ணகியை அரிவாளால் வெட்டிய திருமலைக்குமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் குறிப்பாக, உருகி உருகி காதலித்த காதலி தன்னை வேண்டாம் என்று கூறியதால் ஆத்திரத்தில் காதலன், காதலியை அரிவாளால் வெட்டிய சம்பவம் புளியரைப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# ஒகேனக்கல் காவிரி ஆற்று பகுதியில் குளித்த 2 சிறுமிகள் நீரில் மூழ்கி பலி





தர்மபுரி, ஏப்16

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை ராம்நகர் பகுதியைச் சேர்ந்த முத்தப்பா மற்றும் அவரது உறவினர் பெங்களூர் சர்ஜாபூர் பகுதியைச் சேர்ந்த சென்னப்பா ஆகிய இருவரும் குடும்பத்தினருடன் ஒகேனக்கல் சுற்றுலா தளத்திற்கு சுற்றுலா வந்துள்ளனர்.

இவர்கள் ஒகேனக்கல்லில் பல்வேறு இடங்களில் சுற்றி பார்த்துவிட்டு ஆலம்பாடி காவிரி ஆற்று பகுதியில் குடும்பத்துடன் குளித்துள்ளனர் அப்போது முத்தப்பா மகள் பாக்கியலட்சுமி சின்னப்பா மகள் காவியா ஆகிய இருவரும் காவிரி ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கும் பொழுது ஆழமான பகுதிக்கு சென்றதால் நீச்சல் தெரியாமல் இருவரும் நீரில் மூழ்கியுள்ளனர் உறவினர்கள் இவர்கள் இருவரையும் தேடிப் பார்த்து கிடைக்காததால் ஒகேனக்கல் காவல் நிலையத்திற்கு தகவல் அளித்ததின் பேரில் ஒகேனக்கல் காவல் துறையினரும் தீயணைப்பு மீட்பு துறையினரும் சம்பவ இடத்திற்கு வந்து இருவரையும் தேடி அரை மணி நேரத்திற்குப் பிறகு இருவரையும் சடலமாக மீட்டனர் பின்பு இருவரது உடலும் பென்னாகரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

தின கனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

16.4.2025

## சென்னை வேளச்சேரியில் இன்டலிடாட்ஸ் ப்ரிகேஜ்ஜி மற்றும் டே கேர் பள்ளியை அமைச்சர் திறந்து வைத்தார்



சென்னை வேளச்சேரியில் இன்டலிடாட்ஸ் ப்ரிகேஜ்ஜி மற்றும் டே கேர் பள்ளியை அமைச்சர் மா. சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

சென்னை வேளச்சேரி மேற்கு பகுதியில், சக்தி விஜயலட்சுமி நகர் இரண்டாவது தெருவில், இன்டெலி டாட்ஸ் ப்ரீ கேஜ்ஜி மற்றும் டேக் கேர் பள்ளியை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ரிப்பன் வெட்டி ,குத்து விளக்கு ஏற்றி திறந்து வைத்தார். முன்னதாக இப்பள்ளியின் உரிமையாளர்களான வேளச்சேரி மேற்கு பகுதி இளைஞரணி அமைப்பாளர் ஆர். கே. ராகுல் குமார் ,அர்ச்சனா தம்பதிகள் அமைச்சரை வரவேற்று, அவருக்கு சால்வை அணிவித்து பூங்கொத்து கொடுத்து கௌரவித்தனர் . மேலும் இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏஎம்வி பிரபாகர்ராஜா, சென்னை தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளரும், 176 வது வார்டு மாமன்ற உறுப்பினருமான வேளச்சேரி வே. ஆனந்தம், 178 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பாஸ்கரன் மற்றும் வேளச்சேரி தெற்கு மாவட்ட இளைஞரணி விளையாட்டு மேம்பாட்டு அணியைச் சார்ந்த திமுக கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு பள்ளி உரிமையாளர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார்கள். இப்பள்ளியில் குழந்தைகளின் குழந்தை பருவ அறிவுத்திறனை வளர்க்க விளையாட்டுகளின் மூலமும் ,படிப்பின் மூலமும் அறிவுத்திறன்களை வளர்க்க நிறைய சிறப்பம்சங்கள் நிறைந்த பள்ளியாக இப்பள்ளி திகழ்கிறது. இப்பள்ளியில் ஒரு வயது முதல் ஆறு வயது வரை மாணவ, மாணவிகள் சேர்க்கப்படுகின்றனர். இப்பள்ளியில் அட்மிஷன் இம்மாதம் 25, 26 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது.

## மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு சாலைப்பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத்துறை சார்பில் தலைகவசம் அவசியம் குறித்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி



மயிலாடுதுறை , ஏப்.16

மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு அரசு சாலைப் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துத்துறை சார்பில் தலைகவசம் அவசியம் குறித்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணியை மாவட்ட கலெக்டர் ஹெச்.எஸ்.ஸ்ரீகாந்த் கொடியசைத்து தொடங்கி வைத்து, இருசக்கர வாகன ஓட்டிகளுக்கு விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை வழங்கினார்கள். பின்னர், மாவட்ட கலெக்டர் தெரிவித்ததாவது:

இரு சக்கர வாகனத்தில் தலைக்கவசம் அணிந்து செல்ல வேண்டும். இலகுரக வாகனத்தில் செல்லும் போது சீட் பெல்ட் அணிந்து செல்ல வேண்டும். வாகனம் ஓட்டும் போது செல்போன் பேசுவதை தவிர்க்க வேண்டும். சாலையை கடக்கும் போது நின்று கவனித்து செல்ல வேண்டும். சாலையில் வளைந்து வளைந்து வாகனத்தை இயக்குவதை தவிர்க்க வேண்டும். முன் செல்லும் வாகனத்திலிருந்து போதிய இடைவெளி விட்டு பின் செல்ல வேண்டும்.

உயிரிழப்பு ஏற்படும் வகையில் வாகனம் ஓட்டுவதையும், மதுபோதையில் வாகனம் ஓட்டுவதையும், கைப்பேசி பயன்படுத்தியபடி வாகனம் ஓட்டுவதையும் தவிர்க்க வேண்டும் என மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியின்போது, வட்டார போக்குவரத்து அலுவலர் கதிர்வேல், வட்டார போக்குவரத்து ஆய்வாளர்கள் ராம்குமார், விஸ்வநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) முத்துவடிவேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஒருங்கிணைந்த இந்திய குடியரசு கட்சியின் சார்பில் அம்பேத்கர் பிறந்த நாள் அனுசரிப்பு



ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காட்டில் அம்பேத்கரின் 134 வது பிறந்த நாளை யொட்டி ஒருங்கிணைந்த இந்திய குடியரசு கட்சியின் சார்பில் மாவட்டச் செயலாளர் எஸ் பாரத் தலைமையில் அம்பேத்கரின் பிறந்தநாள் அனுசரிக்கப் பட்டது

இதனைத் தொடர்ந்து பேருந்து நிலையத்தில் உள்ள அம்பேத்கரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தார். இதில் மாவட்டத் தலைவர் கே.குசேலன் முன்னிலையில் சமத்துவ உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர் அதனைத் தொடர்ந்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது இந்நிகழ்வில் அக்கட்சியை சேர்ந்த முக்கிய பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சேலம் மாவட்டம் ஆத்தூர் கெங்கவல்லி சட்டமன்ற பகுதிக்கு உட்பட்ட கடம்பூர் ஊராட்சி அண்ணா நகர் அருந்ததியார் காலணியில் அண்ணல் அம்பேத்கர் 134 வது பிறந்த நாளை முன்னிட்டு ஊர் பொதுமக்களும் தமிழ் புலிகளின் கட்சி தோழர்களும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள் அது சமயம் தமிழ் புலிகள் கட்சி கொடி ஏற்று விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் அண்ணல் அம்பேத்கர் 135வது பிறந்தநாள் (சமத்துவநாள்) தினத்தை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்




சென்னை கலைவாணர் அரங்கில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் அண்ணல் அம்பேத்கர்அவர்களின் 135 ஆவது பிறந்தநாள் (சமத்துவநாள்) தினத்தை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தலைமையில் நடைபெற்றதைத் தொடர்ந்து தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற சமத்துவ நாள் தின விழாவில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் அவர்கள். தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனி நாடார் அவர்கள். சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் ஈ.ராஜா அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் சதன்திருமலைக்குமார் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப. அவர்கள் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

இதனை தொடர்ந்து ஏ.கே.கமல்கிஷோர்.இ.ஆ.ப , தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் அவர்கள். தென்காசி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் சமத்துவநாள் உறுதிமொழியினை அனைத்து துறை அரசு அலுவலர்களும் ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அன்னம்மாள், நல அலுவலர் மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் உதய கிருஷ்ணன் மற்றும் அனைத்து துறை அரசு அலுவலர்கள். உள்ளாட்சி பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ரெய்டு 2 படத்தில் தமன்னா நடனமாடிய பாடல் டிரெண்டிங்




தமன்னா 16 வயதிலேயே சினிமாவுக்கு வந்து பிரபல நடிகையாக உயர்ந்தார். தமிழில் விஜய், அஜித்குமார், சூர்யா, விக்ரம், தனுஷ் என முன்னணி நடிகர்களோடு நடித்துள்ளார். சமீபத்தில் 'ஜெயிலர்' படத்தில் காவாலா பாடலில் நடனமாடி அனைவரது கவனத்தை ஈர்த்தார். அதனை தொடர்ந்து இந்தியில் பல முன்னயி நடிகர்களின் படங்களில் நடித்து ரசிகர்களை கவர்ந்தார். சமீபத்தில் இவரது நடிப்பில் வெளியான 'பப்ளி பவுன்சர், லஸ்ட் ஸ்டோரிஸ் 2' போன்ற படங்கள் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றன. அடுத்ததாக ஸ்த்ரீ 2 படத்தில் 'ஆஜ் கி ராத்' என்ற பாடலுக்கு நடனமாடி இருந்தார். இந்த படத்தில்ராஜ்குமார்ராவ், ஷ்ரத்தாகபூர், அபிஷேக்பானர்ஜி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். இது இந்தி படங்களிலேயே அதிக வசூல் செய்த படம் என்ற சாதனையை பெற்றுள்ளது. இப்படத்தை அமர் கவுசிக் இயக்கியுள்ளார்.

அஜய் தேவ்கன் நடிப்பில் கடந்த 2018ம் ஆண்டு வெளியான படம் ரெய்டு. இதில் தேவ்கன் ஐஆர்எஸ் அதிகாரி அமய் பட்நாயக் கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். தற்போது ரெய்டு படத்தின் தொடர்ச்சியாக ரெய்டு 2 உருவாகியுள்ளது. இதில், அஜய் தேவ்கன், வாணி கபூர் மற்றும் ரஜத் கபூர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.இப்படம் வருகிற மே மாதம் 1ம் தேதி தொழிலாளர் தினத்தில் வெளியாக உள்ளது. இப்படத்தில் 'நாஷா' என்ற சிறப்பு பாடலுக்கு நடிகை தமன்னாநடனமாடியுள்ளார். இது தொடர்பானபுகைப்படங்கள்இணையத்தில் வைரலானநிலையில், தற்போது தமன்னா நடனமாடியுள்ள இந்த பாடல் வெளியாகி வைரலாகி வருகிறது.

இந்நிலையில், ரெய்டு 2 படத்தில் தமன்னா கவர்ச்சி நடனம் ஆடியுள்ள பாடல் யூடியூப் டிரெண்டிங்கில் 2வது இடம் பிடித்துள்ளது. இது குறித்து தனது இன்ஸ்டா ஸ்டோரியில் நெகிழ்ச்சியாகப் பதிவிட்டுள்ளார்.

ஸ்த்ரீ 2 படத்தில் தமன்னா நடனமாடிய வீடியோ பாடல் யூடியூப்பில் 50 கோடி பார்வைகளை கடந்தது குறிப்பிடத்தக்கது.

## கொல்கத்தா அபார பந்துவீச்சு... பஞ்சாப் கிங்ஸ் 111 ரன்களில் ஆல் அவுட்



18வது ஐ.பி.எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடரில் இதுவரை 30 லீக் ஆட்டங்கள் நடந்து முடிந்துள்ளன. இந்நிலையில், இந்த தொடரில் முல்லன்பூரில் இன்று நடைபெற்று வரும் 31வது லீக் ஆட்டத்தில் பஞ்சாப் கிங்ஸ் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் ஆடி வருகின்றன.

இந்த ஆட்டத்திற்கான டாசில் வென்ற பஞ்சாப் முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து பஞ்சாபின் தொடக்க வீரர்களாக ப்ரப்சிம்ரன் சிங் மற்றும் பிரியன்ஷ் ஆர்யா களம் இறங்கினர். இதில் பிரியன்ஷ் ஆர்யா 22 ரன், ப்ரப்சிம்ரன் சிங் 30 ரன் எடுத்து அவுட் ஆகினர்.

இதையடுத்து களம் புகுந்த ஸ்ரேயாஸ் ஐயர் ரன் எடுக்காமலும், ஜோஷ் இங்கிலிஸ் 2 ரன்னிலும், நேஹல் வதேரா 10 ரன்னிலும், மேக்ஸ்வெல் 7 ரன்னிலும், இம்பேக்ட் வீரராக களம் புகுந்த சூர்யாஷ் ஷெட்ஜே 4 ரன்னிலும், மார்கோ ஜான்சென் 1 ரன்னிலும் அடுத்தடுத்து அவுட் ஆகினர்.

தொடர்ந்து ஷஷாங் சிங் மற்றும் பார்ட்லெட் ஜோடி சேர்ந்தனர். இதில் ஷஷாங் சிங் 18 ரன்னில் அவுட் ஆனார். இறுதியில் பஞ்சாப் அணி 15.3 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 111 ரன்னுக்கு ஆல் அவுட் ஆனது.

பஞ்சாப் தரப்பில் அதிகபட்சமாக ப்ரப்சிம்ரன் சிங் 30 ரன் எடுத்தார். கொல்கத்தா தரப்பில் ஹர்ஷித் ராணா 3 விக்கெட் வீழ்த்தினார். தொடர்ந்து 112 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் கொல்கத்தா ஆட உள்ளது.


## பார்சிலோனா ஓபன் டென்னிஸ்: 2வது சுற்றுக்கு முன்னேறினார் கேஸ்பர் ரூட்

பல முன்னணி வீரர்கள் கலந்து கொண்டுள்ள பார்சிலோனா ஓபன் டென்னிஸ் தொடர் ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் நடைபெற்று வருகிறது. கடந்த 12ம் தேதி தொடங்கிய இந்த தொடர் வரும் 20ம் தேதி வரை நடக்கிறது.

இந்நிலையில், இந்த தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் நார்வேயின் கேஸ்பர் ரூட், கொலம்பியாவின் டேனியல் எலாஹி கலன் உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய கேஸ்பர் ரூட் 64, 63 என்ற நேர் செட் கணக்கில் டேனியல் எலாஹி கலனை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறினார்.

## சசிகுமாரின் டூரிஸ்ட் பேமிலி 2வது பாடல் இன்று வெளியீடு




சுப்ரமணியபுரம் படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் சசிகுமார். 'ஈசன்' படத்தை இயக்கிய சசிகுமார் அதன்பின் நடிப்பதில் கவனம் செலுத்தினார். அவரது நடிப்பில் சமீபத்தில் வெளியான 'அயோத்தி, கருடன், நந்தன்' ஆகிய திரைப்படங்கள் வெற்றிப்படங்களாக அமைந்தன.

அதனை தொடர்ந்து தற்போது சசிகுமார் 'டூரிஸ்ட் பேமலி' என்ற படத்தில் நடித்துள்ளார். இந்த படத்தை 'குட் நைட்' படத்தினை தயாரித்த மில்லியன் டாலர் ஸ்டுடியோஸ்தயாரிக்கிறது.அபிஷன்ஜீவிந்த்இயக்கும்இந்தப்படத்தில்சசிகுமாருடன் நடிகை சிம்ரன் நடிக்கிறார். ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். சமீபத்தில் இப்படத்தின் டீசர் மற்றும் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியாகி வைரலானது. இந்த படத்தின் டீசரில் சசிகுமார் சிம்ரன் பேசும் இலங்கை தமிழ் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது. இத்திரைப்படம் வரும் மே 1ம் தேதி வெளியாகும் என படக்குழு அறிவித்துள்ளது.

படத்தின் முதல் பாடலான 'முகை மழை' பாடலை படக்குழு வெளியாகி வைரலானது. இப்பாடலை மோகன் ராஜன் வரிகளில் ஷான் ரோல்டன் மற்றும் சைந்தவி இணைந்து பாடியுள்ளனர்.

இந்நிலையில் படத்தின் அடுத்த பாடலான 'ஆச்சாலே' பாடல் நாளை மாலை 5 மணிக்கு வெளியாக உள்ளதாக படக்குழு புரோமோ வீடியோவை வெளியிட்டுள்ளது.

## லக்னோவுக்கு எதிராக ரிட்டயர்டு அவுட்... மவுனம் கலைத்த திலக் வர்மா

ஐ.பி.எல். தொடரில் லக்னோவில் கடந்த 4ம் தேதி நடைபெற்ற லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் லக்னோ சூப்பர் ஜெயன்ட்ஸ் அணிகள் மோதின. இந்த ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த லக்னோ 20 ஓவரில் 8 விக்கெட்டை இழந்து 203 ரன்கள் எடுத்தது. லக்னோ தரப்பில் அதிகபட்சமாக மிட்செல் மார்ஷ் 60 ரன் எடுத்தார்.

தொடர்ந்து 204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் புகுந்த மும்பை 20 ஓவரில் 5 விக்கெட்டை இழந்து 191 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 12 ரன் வித்தியாசத்தில் லக்னோ திரில் வெற்றி பெற்றது. மும்பை தரப்பில் அதிகபட்சமாக சூர்யகுமார் யாதவ் 67 ரன் எடுத்தார். இந்த ஆட்டத்தில் மும்பை வீரர் திலக் வர்மா ரன்கள் எடுக்க மிகவும் சிரமப்பட்டார்.

இதன் காரணமாக அவர் 23 பந்தில் 25 ரன் எடுத்திருந்த போது 'ரிட்டயர்டு அவுட்' ஆகி வெளியேறினார். இந்த முடிவுக்கு ஆதரவாகவும், எதிராகவும் பலர் தங்களது கருத்துகளை வெளியிட்டு வந்தனர். இதற்கு விளக்கம் அளித்த மும்பை கேப்டன் பாண்ட்யா,


எங்களுக்கு இறுதியில் பெரிய ஷாட்கள் தேவைப்பட்டது. கிரிக்கெட்டில் இதுபோன்று சில நாட்கள் வரும் நீங்கள் எவ்வளவு முயற்சி செய்தாலும் அது நடக்காது. நல்ல கிரிக்கெட் விளையாட வேண்டும். நான் அதை எளிமையாக வைத்திருக்க விரும்புகிறேன் என்றார்.

இந்நிலையில், ரிட்டயர்டு அவுட் விவகாரம் குறித்து எதுவும் பேசமால் இருந்த திலக் வர்மா, தற்போது அதுகுறித்து விளக்கம் அளித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, நான் அந்தப் போட்டியில் 'ரிட்டயர்டு அவுட்' செய்யப்பட்டது குறித்து பெரிதாக எதுவும் யோசிக்கவில்லை. அவர்கள் அணியின் நலனுக்காகவே இந்த முடிவை எடுத்திருக்கிறார்கள் என்று நேர்மறையான வழியிலேயே அந்த முடிவை எடுத்துக் கொண்டேன்.

அதனை நான் எந்த விதத்திலும் எதிர்மறையாக எடுத்துக் கொள்ளவில்லை. உங்களுக்கு இது போன்று ஒரு விஷயம் நடக்கும் போது நீங்கள் அதனை எப்படி எடுத்துக் கொள்கிறீர்கள் என்பது தான் மிகவும் முக்கியம். அதனால் நான் இதனை இப்படித்தான் யோசித்து எடுத்துக் கொண்டேன். நான் எந்த வரிசையில் பேட்டிங் செய்ய களம் இறங்கினாலும் சவுகரியமாகவே இருக்க விரும்புகிறேன்.

அதனால்தான் அணியின் பயிற்சியாளர்கள் மற்றும் ஊழியர்களிடம் நீங்கள் எந்த வரிசையில் என்னை அனுப்பினாலும் பரவாயில்லை, நான் அதற்கு ஏற்றவாறு சவுகரியமான வகையில் என்னால் முடிந்ததை செய்வேன் என்று கூறி இருக்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

## அஞ்சலிக்கு ஜோடியாக நடித்த 'விஸ்வம்பரா' இயக்குனர் எந்த படத்தில் தெரியுமா?



நந்தமுரி கல்யாண் ராமின் 'பிம்பிசாரா' படத்தின் மூலம் இயக்குனராக அறிமுகமானவர் வசிஷ்டா மல்லிடி. இவர் தற்போது சிரஞ்சீவி நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட திரைப்படமான விஸ்வம்பராவை இயக்கி வருகிறார்.

சமீபத்தில் இப்படத்தின் முதல் பாடலான 'ராமராமா' வெளியாகி ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படம் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், வசிஷ்டா மல்லிடி சினிமாவில் இயக்குனராவதற்கு முன்பு நடிகராக அடியெடுத்து வைத்திருக்கிறார் என்பது உங்களுக்கு தெரியுமா?. ஆம், 'விஸ்வம்பரா' இயக்குனர் ஹீரோவாக ஒரு படத்தில் நடித்திருக்கிறார். அவருக்கு ஜோடியாக அஞ்சலி நடித்திருக்கிறார்.

கடந்த2017ம்ஆண்டுமறைந்தபாடலாசிரியர்குலசேகரின்இயக்கத்தில் வெளியான 'பிரேமலேகா ராசா' படம்தான் அது. ஆனால், இப்படம் திரையரங்குகளுக்கு வரவில்லை.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.